மூன்று விஷயங்களில் முகத்துவாரம் முக்கியமான பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 36 முகத்துவாரங்கள் உள்ளன. அரசு இவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து, 36 முகத்துவாரங்களையும் ஆழப்படுத்தி, அகலப்படுத்திட நடவடிக்கை எடுத்து வருகிறது. மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருதியும், கடலரிப்பினைத் தடுப்பதற்கும், மீன்வளம் பெருகுவதற்கும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்துவருகிறது. இதனை ஒரே நாளில் செய்துவிட முடியாது. எனவே, 2 வருட காலத்திற்குள் 36 முகத்துவாரங்களையும் ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, நிலைப்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**124—**

## நெல் கொள்முதல் நிலையம்

***5138—திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறையில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதியில் தற்போது 8 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கிவருகின்றன. மேலும், மயிலாடுதுறையில் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

*2019 ஜூலை 17]*

மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, இதனைக் கனிவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. வி. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அம்மா அவர்களின் வழியில், அம்மாவின் அரசை வழிநடத்தும் குடிமராமத்து நாயகன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் O.P.S. அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை தொகுதி முப்போகமும் விளைச்சல் தரும் பகுதி. நெல் அறுவடை ஆரம்பமாகிவிட்டது. ஆகையால், மயிலாடுதுறை தொகுதியில் பரவலாக நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும். அதேபோன்று, தற்போது 8 ஊராட்சிகளில் நெல் கொள்முதல் செய்வதற்கு அரசுக்குச் சொந்தக் கட்டடம் உள்ளது. மேலும், ஆனந்த தாண்டவபுரம், நமச்சிவாயபுரம், மகாராஜபுரம், திருச்சிற்றம்பலம், மாப்படுகை ஆகிய ஊர்களில் அரசு நெல் கொள்முதல் செய்வதற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை பகுதியில், நெல் அறுவடை தொடங்கிவிட்டது. அதனால் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அதிகமாகத் திறக்க வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்தார்கள். எந்தெந்த இடங்களிலெல்லாம் தேவைப்படுகிறதோ, அந்த இடங்களிலெல்லாம் உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்பதனை இந்த நேரத்தில்

தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆனந்த தாண்டவபுரம், நமச்சிவாயபுரம், மகாராஜபுரம், மாப்படுகை மற்றும் திருச்சிற்றம்பலம் என கூடுதலாக 5 ஊர்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவற்றில், திருச்சிற்றம்பலத்தில் தற்போது 35 இலட்சம் ரூபாய் மதிப்பில் நெல் கொள்முதல் நிலையம் கட்டப்பட்டு வருகிறது. மற்ற இடங்களில் எல்லாம் 40 சென்ட் இடத்தை அடையாளப்படுத்திக் காட்ட வேண்டும். அங்கு புறம்போக்கு நிலம் இருந்தாலோ அல்லது விவசாயிகள் தானாக முன்வந்து நிலத்தை வழங்கினாலோ, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அவர்கள் அந்த நிலத்தைப் பதிவு செய்து கொடுக்க வேண்டும். அவ்வாறு பெறப்படுகின்ற நிலத்தில் நிச்சயமாக, உறுதியாக நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும். மேலும், அந்தப் பகுதி அதிகமாக நெல் விளைகின்ற பகுதி. எனவே, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு permanent கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. வி. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் சொந்தக் கட்டடத்தில் கட்டிக்கொடுக்கப்படும் எனத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை தொகுதியில் சுமார் ஒன்றரை இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இப்போது சேமிப்புக் கிடங்கு மயிலாடுதுறை—கும்பகோணம் சாலையில் சித்தர்காடு பகுதியில் உள்ளது. இந்தப் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, 50,000 மெட்ரிக் டன் நெல்லை சேமிக்க, நவீன வசதியுடன்கூடிய சேமிப்புக் கிடங்கை மயிலாடுதுறையில் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

*2019 ஜூலை 17]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள், மயிலாடுதுறை பகுதியில் ஒன்றரை இலட்சம் மெட்ரிக் டன்னுக்கு மேலாக நெல் கொள்முதல் செய்யப்படுவதாகவும், அதற்கு சேமிப்புக் கிடங்கு வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளார். அதற்கு சித்தர்காடு பகுதியில் இன்னும் கூடுதலாக சேமிப்புக் கிடங்கு வேண்டுமென்று கோரியுள்ளார். அதாவது, மயிலாடுதுறை மற்றும் பூம்புகார் தொகுதிகளுக்கு உட்பட்ட அந்தப் பகுதிகளில் நடப்பு ஆண்டு 75,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த 75,000 மெட்ரிக் டன் நெல்லை சேமிப்பதற்கு அங்கே போதுமான வசதி இருக்கிறது. கடந்த எட்டு ஆண்டுகளில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, தமிழ்நாடு முழுவதும் 360 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைக் கட்டுவதற்கு 122 கோடியே 45 இலட்சம் ரூபாயும், 435 நெல் உலர்களங்கள் கட்டுவதற்கு 38 கோடியே 92 இலட்சம் ரூபாயும் ஒதுக்கியுள்ளது.*

*அதுமட்டுமல்லாமல், நாகப்பட்டினம் மாவட்டத்தில் பரிட்சார்த்தமாக எருக்கூர் என்ற இடத்தில் 64 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடன் ஒரு* SILO *கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது அதுவும்* function *ஆகிறது. எனவே, தேவையான இடங்களில் கிடங்குகள் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சித்தர்காடு குடோனைப் பற்றித் தெரிவித்துள்ளார். சித்தர்காடு பகுதியில் உள்ள அந்த* MRM*–ஐ நான் தொடர்ந்து பலமுறை பார்த்திருக்கிறேன். அங்கு இடவசதி இல்லை. வருங்கால தேவையைக் கணக்கில் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வினாவை எழுப்பியிருக்கிறார்கள். எனவே, அவர் வேறு ஓர் இடத்தைக் குறிப்பிட்டுச் சொன்னால், வேறு இடத்தில் அல்லது அதன் பக்கத்திலேயே இடம் கிடைக்குமானால், உடனடியாக கிடங்கினைக் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா*

அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**125—**

## கால்நடைக் கிளை நிலையம்

***6212—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியம், தென்னிலை ஊராட்சி, கீழ்சக்கரக்கோட்டையில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியம், தென்னிலை ஊராட்சி, கீழ்சக்கரக்கோட்டையில் 1,400 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க குறைந்தது 3,000 கால்நடை அலகுகள் இருக்கவேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கீழ்சக்கரக்கோட்டையில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

**திருமதி ம. கீதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும்,